# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE

# මැතිවරණ ප්‍රචණ්ඩත්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය

# தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

105 - 5th Lane, Colomo - 03, Sri Lanka
Tel: +94 11 2564404, Fax: +94 11 4722632
**E-mail:** cmev@cpalanka.org **Website:** http://cmev.wordpress.com


## தென்மாகாண சபைத் தேர்தல் - 2009

### ஊடக அறிக்கை இல - 02

### 2009 – ஒக்டோம்பர் 02

**02 ஒக்டோபர், 2009 கொழும்பு இலங்கை** தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) அதிகரித்துவரும் வன்முறைகள் தொடர்பில் ஆழ்ந்த கரிசனத்திற்குள்ளாகியுள்ளது.

**வன்முறை நிலவரம்**

2009 ஒக்டோம்பர் 01ம் திகதி வரையில் 56 தேர்தல் தொடர்பான வன்முறைகள் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தினால் (CMEV) உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் 15 சம்பவங்கள் பாரிய வன்முறைச் சம்பவங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அச்சுறுத்தல் மற்றும் கொலை அச்சுறுத்தல் சம்பவங்கள் 06 ஆக உயர்ந்துள்ளன. 02 தீவைப்புச் சம்பவங்கள் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தினால் (CMEV) உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. 04 தாக்குதல் சம்பவங்களும் 01 பலத்த காயப்படுத்தல் சம்பவமும் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு (CMEV) கிடைக்கப்பெற்றுள்ளன.

கூடுதலான வன்முறைச் சம்பவங்கள் காலி மாவட்டத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளன. கிடைக்கப்பெற்றுள்ள 15 பாரிய வன்முறைச் சம்பவங்களுள் 10 சம்பவங்கள் அம் மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ள அதே வேளை கிடைக்கப்பெற்ற மொத்த சம்பவங்கள் 56 இல் அதிக எண்ணிக்கையான வன்முறைச் சம்பவங்கள் (24) காலி மாவட்டத்திலிருந்தே பதிவாகியுள்ளன. 05 பாரிய வன்முறைச் சம்பவங்கள் ஹினிதும தேர்தல் தொகுதியிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளன. அம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை மாவட்டத்திலிருந்து முறையே 02 மற்றும் 03 பாரிய வன்முறைச் சம்பவங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) மொத்தமாக அம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து 21 வன்முறைச்சம்பவங்களையும் காலி மாவட்டத்திலிருந்து 11 வன்முறைச்சம்பவங்களையும் பதிவுசெய்துள்ளது.

மொத்த பாரிய வன்முறைச் சம்பவங்கள் 15இல் 12 சம்பவங்களில் ஐ.ம.சு.மு குற்றம்சாட்டப்பட்டுள்ள அதேவேளை 03 பாரிய சம்பவங்களில் அடையாளம் காணப்படாத கட்சிகள் மற்றும் குழுக்கள் குற்றம்சுமத்தப்பட்டுள்ளன.

ஆளும்கட்சியான ஐ.ம.சு.முன்னணி கட்சிக்குள்ளே விருப்புவாக்குகளுக்கு நிலவும் போட்டி தேர்தல் நெருங்கும் இவ்வேளையில் மேலும் அதிகரித்துள்ளது. ஐ.ம.சு.முன்னணி மேற்கொண்டுள்ள 13 முறைப்பாடுகளில் 10 முறைப்பாடுகள் அக்கட்சி அங்கத்தவர்களுக்கெதிராகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு (CMEV) ஜே.வி'பியிடமிருந்து 32 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றுள் 11 ஐ.ம.சு.முன்னணிக்கு எதிரானதாகும். கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளில் 24 சம்பவங்களின் போது குற்றத்தை மேற்கொண்ட கட்சிகள் அடையாளம் காணப்படவில்லை.

**பிரதான பிரச்சினைகள்**

தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் (CMEV) கள கண்காணிப்பாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ள அறிக்கைகள் தொடர்ந்தும் தேர்தல் சட்டவிதிமுறைகள் மீறப்படுகின்ற நிலவரத்தை உறுதிப்படுத்துகின்றன. இலக்கம் 02, 1988

மாகாணசபைகள் தேர்தல் சட்டத்தின் 74ம் பிரிவு பதாகைகள் மற்றும் சுவரொட்டிகள் காட்சிப்படுத்துவதற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள பொலிஸாருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. இச்சட்டஏற்பாடுகள் மற்றும் பொதுஇடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள சட்டவிரோத பதாகைகளை நீக்குவதற்கான ஜனாதிபதியின் உத்தரவு என்பவற்றை தொடாந்தும் இன்னும் பதாகைகள் நீக்கப்படவேண்டி உள்ளதாக தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் (CMEV) களக் கண்காணிப்பாளர்கள் அறியத்தருகின்றனர். தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் (CMEV) களக் கண்காணிப்பாளர்களின் அறிக்கைகள் காலி, ஹினிதும, எல்பிடிய மற்றும் அம்பந்தோட்டை தேர்தல் தொகுதிகளில் பதாகைகளை இன்னும் காணக்கூடியதாக உள்ளன என தெரிவிக்கின்றன.

தென்மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. ஜயன்த குலதிலக அவர்களை இதுதொடர்பாக தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) தொடர்புகொண்டபோது சட்டவிரோத பதாகைகளை நீக்குவதற்கான நடவடிக்கைகள் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஒக்டோம்பர் 01 ம் திகதிவரை 80,61,39, மற்றும் 60 பதாகைகளை முறையே மாத்தறை, காலி, எல்பிடிய மற்றும் தங்கல்லை பொலிஸ் பிரிவுகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

ஒக்டோபர் 01ம் திகதி காலை 5.30 மணியிலிருந்து மாலை 5.25 மணிக்கு இடைப்பட்ட காலத்தில் ஐ.ம.சு முன்னணி வேட்பாளர், ஜோன் சில்வா எதிரிசூரியவின் (வேட்பாளர் இலக்கம் 11) 250 -300 வரையிலான ஆதரவாளர்கள் குழுவொன்று ‘டபள் கெப்’ (57-5815) ஒன்றில் ஒலிப்பெருக்கியை பயன்படுத்தி பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் மெதகெட்டிய, தன்கெட்டிய, கடல்வீதி, என்னபிடிய முஸ்லிம் கிராமங்களில் மற்றும் தங்கல்லை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.க வேட்பாளர், கபில ஜயந்த வெல்லப்பிலி (வேட்பாளர் இலக்கம் 03) மாத்தறை மற்றும் கம்புறுபிடிய பிரதேசங்களில் வாக்காளர்களுக்கு பணம் மற்றும் மண்வெட்டிகளை தனது பிரச்சார நடவடிக்கைகளின் பொழுது வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) கபில ஜயந்த வெல்லப்பிலியை தொடர்பு கொண்டபொழுது இக்குற்றச்சாட்டை மறுத்ததுடன் தனக்கு ஏலவே மக்களின் ஆதரவுள்ளதெனவும் வாக்காளர் தொகையை அதிகரிப்பதற்காக இத்தகைய ஊக்குவிப்புக்களை வழங்கவேண்டிய அவசியம் தனக்கில்லையெனவும் தெரிவித்தார்.

தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) அரச நிறுவனங்களினால் தேர்தல் விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை வரவேற்கின்றது. தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் (CMEV) அனுபவத்தின்படி, தேர்தல் நெருங்கும் வேளையில் வன்முறைகள் அதிகரிக்கின்றமை தொடர்ந்தும் காணப்படுகின்ற ஒரு நிலவரமாகும் எனவே வன்முறைகளற்ற தேர்தல் பிரச்சார சூழலொன்றையும் மற்றும் தேர்தலொன்றையும் உறுதிப்படுத்துவதற்காக தேர்தல் ஆணையாளர் மற்றும் குறிப்பாக பொலிஸார் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) அழைப்புவிடுக்கின்றது. பல்வேறு தேர்தல் கண்காணிப்பு பணிகள் தொடர்பான அனுபவமானது, ஒரு பிரதேசத்தில் தேர்தல் தினத்தன்று நடைபெறுகின்ற வன்முறைச் சம்பவங்கள் பிரச்சாரக் காலப்பிரிவில் அக் குறிப்பிட்ட பிரதேசத்தில் இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்களுடன் நேரடியாக தொடர்புபட்டதாக காணப்படுகின்றதை உறுதிப்படுத்துகின்றது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) 1997 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. இந்நிறுவனம், மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் (CPA), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் INFORM மனித உரிமைகள் தொடர்பான ஆவணப்படுத்தல் நிலையம் ஆகிய நிறுவனங்களின் ஒன்றியமாகும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் செயலகமாக செயற்படுகின்றது.

துசித்த சிறிவர்தன (சட்டத்தரணி)
தேசிய இணைப்பாளர்.